DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.20/2022**

**CNR.No: TNTH06-000181 -2022 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கத்துரை | Town | கூடலூர் |
| Father's Name | : ராசு | Occupation | : |
| Age | : | **PW2** | |

நாள் : 04.04.2025

**வாதி தரப்பு முதல் விசாரணை**

1) நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின்பேரில் நான் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். எனக்கு கீழக்கூடலூர் பட்டாளம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் கலாவதி மற்றும் அவரது அண்ணன் முருகேசன் மற்றும் அவரது தந்தை ராமர் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராமர்தேவரும், முருகேசனும் 14.02.2001ம் தேதியில் கலாவதியின் பெயரில் பத்திரம் எழுதவேண்டுமென கேட்டு அதன் பேரில் பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். என் முன்பு காட்டப்படும் வாசாஆ 2 கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலின் சொத்துவிபரத்தில் கதவு எண்.22A என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) வாசாஆ 2 கிரைய ஆவணத்தை நான் எழுதுவதற்கு எந்தெந்த முன் ஆவணங்களை நான் பார்த்தேன் என்றால் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மற்றும் அடமான கடன் பத்திரம் ஆகிய இரண்டையும் பார்வையிட்டு எழுதினேன். வாசாஆ 2 ஆவணம் பதிவு செய்தபோது ராமர்தேவர் மற்றும் கலாவதி, முருகேசன் ஆகியோர் நேரில் சார்பதிவாளர் அலுவலகம் வந்தார்களா என்றால் வந்தார்கள். வாசாஆ 2 கிரையம் ஆவணம் பதிவு செய்தபோது கலாவதி அதற்கு உரிய கிரைய தொகையை கொடுத்தாரா என்றால் ஆமாம், ராமர்தேவரிடமும், முருகேசனிடமும் கொடுத்து அதன்பிறகே பத்திரம் பதிவு செய்யப்பட்டது, அச்சொத்தைப்பொறுத்து

ஏற்கனவே இருந்த கடன் தொகையை செலுத்தி ரசீது பெற்று வந்து மேற்படி ஆவணம் எழுதப்பட்டது. வாசாஆ 2 ஆவணம் என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் குறித்து சாட்சியம் அளிக்க நான் இன்று ஆஜராகியுள்ளேன்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வாசாஆ 2 ஆவணமானது 2001ம் வருடம் எழுதி பதிவு செய்யப்பட்ட பிறகிலிருந்து தற்போது வரை நான் மேற்படி ஆவணத்தை அசலை எப்போதாவது பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை, ஒளிநகலைத்தான் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தின் ஒளிநகல் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை, சற்றுமுன்பு வாதி தரப்பு வழக்கறிஞர் காண்பித்தபோது பார்த்தேன். 2001ம் வருடம் நான் கிரைய ஆவணத்தை எழுதியதாக கூறும் சமயத்தில் நான் பார்வையிட்டதாக சொல்லும் பாக பத்திரம் மற்றும் கூட்டுறவு சங்க அடமான கடன் பத்திரம் ஆகியவற்றை யார் தரப்பினர்களாக இருந்து ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், பாகபத்திரமானது அய்யர்தேவர், வீரம்மாள் மற்றும் ராமர்தேவர் ஆகியோருக்கிடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது, கடன் அடமான பத்திரத்தை ராமர்தேவர் அவரது மகனை மைனராக குறிப்பிட்டு கூட்டுறவு சங்கத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளார்.

2) கலாவதி, ராமர், முருகேசன் ஆகியோரை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் சுமார் 45 ஆண்டுகளாக தெரியும். 2001ம் வருடம் வாசாஆ 2 ஆவணம் நான் எழுதியபோது முருகேசனுக்கு என்ன வயது இருந்திருக்கும் என்றால் எனக்கு சரியாக வயது தெரியவில்லை. தோராயமாக என்ன வயது இருந்திருக்கும் என்றால் என்னால் தோராயமாகக்கூட சொல்ல இயலவில்லை. வாசாஆ 2 ஆவணத்தில் மைனர் பிள்ளைகளாக யார், யாரை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள மைனர் பெயர் விபரங்கள் ஞாபகமில்லை.

3) வாசாஆ 2 ஆவணத்தில் மைனர் பெண்ணின் பெயரை சுவாதி என்பதற்கு பதிலாக பொன்நிலா என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர்கள் சொன்ன பெயரைத்தான் எழுதியிருக்கிறேன். வாசாஆ 2 ஆவணத்தை உண்மையில் முருகேசன் என்னிடம் எழுதச்சொல்லியிருக்கும்பட்சத்தில் அவரது பெண் பிள்ளையின் பெயரை சரியாக குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கும் என்றாலும், முருகேசன் இல்லாமல் மூன்றாம் நபரால் சொல்லப்பட்டு ஏற்படுத்தப்படுத்தப்பட்டதால் தான் மேற்படி ஆவணத்தில் தவறான பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 2 ஆவணத்தின் அசலில் முருகேசன் கையொப்பம் செய்யவே இல்லை என்றாலும், அன்றை தேதியில் முருகேசன் சார்பதிவாளர் அலுவலகம் வரவே இல்லை என்றாலும் சரியல்ல, நான் தான் முருகேசன் மற்றும் கலாவதியிடம் கையொப்பம் பெற்று பதிவு செய்ய சமர்ப்பித்தேன்.

4) நான் எத்தனை வருடமாக பத்திரம் எழுதுகிறேன் என்றால் சுமார் 40 ஆண்டுகளாக எழுதுகிறேன். நான் 2001ம் ஆண்டில் பார்வையிட்டதாக கூறும் பாகபத்திர சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். ராமருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் முருகேசனுக்கும், கலாவதிக்கும் பாக உரிமை உள்ளது என்றாலும், நான் அதனை பொறுத்து தவறாக வாசாஆ 2 ஆவணத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல, அந்த ஆவணம் அவர்கள் குடும்பத்திற்குள் எழுதப்பட்ட ஆவணமாகும். வாசாஆ 2 ஆவணத்தில் கூட்டுறவு கடன் சங்க அடமான கடன் பத்திரம் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மேஜராக இருந்தபோது அவரை மைனராக காண்பித்து அவரது தந்தை ஏற்படுத்திய கடன் அடமானபத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் அந்த ஆவணம் குறித்து எனக்கு தெரியாது.

5) வாசாஆ 2 ஆவண சொத்தின் நீள அகலம் தெரியுமா என்றால் தெரியாது, பத்திரத்தைப்பார்த்து தான் சொல்லமுடியும். என்னை, கலாவதி சாட்சியம் அளிக்க அழைத்து நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தால் தான் வருவேன் என்று நான் கூறினேனா என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. கலாவதி என்னை

சாட்சியம் அளிக்க அழைத்தாரா என்றால் அழைக்கவில்லை.

**(குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

(ஒ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.